புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com
ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் திருவள்ளுவர் ஆண்டு 2048 டிசம்பர் 21, 2017 புரட்சி 16 முழக்கம் 49 விலை: ரூ.3.00

## ஈரோடு மாநாடு பெண்களுக்கு அழைப்பு

# சுயமரியாதைக்குப் போராடுங்கள்!

‘பெண்கள் சுயமரியாதைக்குப் போராட முன் வரவேண்டும்’ என்று ஈரோட்டில் நடந்த சுய மரியாதை மாநாடு பெண்களுக்கு அறைகூவலை விடுத்தது.

அரங்குகளில் மண்டபங்களில் மட்டுமே ஒலித்து வந்த பெண்ணுரிமைக் கருத்துகளை திறந்தவெளி மாநாடாக நடத்தி வருகிறது திராவிடர் விடுதலைக் கழகம். சென்னையில் ஜாதி ஒழிப்புக்கு அழைப்பு விடுத்தது பெண்கள் மாநாடு. ஈரோட்டில் பெண்கள் சுயமரியாதைக்குப் போராட முன்வரவேண்டும் என்று வேண்டுகோள் விடுத் துள்ளது.

ஈரோட்டில் திராவிடர் விடுதலைக் கழகம் சார்பாக பெண்கள் சுயமரியாதை மாநாடு டிசம்பர் 16 மாலை, வீரப்பன் சத்திரம் சாலையில் எழுச்சியுடன் நடைபெற்றது.



கோவை, சேலம், மேட்டூர், திருப்பூர், ஈரோடு, சென்னை, நாமக்கல் உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களிலிருந்து தோழர்கள், தோழியர்கள் மாநாட்டுக்கு திரண்டு வந்திருந்தனர். காஞ்சி மக்கள் மன்றத்தின் பறையிசையோடு நிகழ்ச்சிகள் தொடங்கின. தொடர்ந்து பெண்ணுரிமை, ஜாதி எதிர்ப்பு, இந்துத்துவ எதிர்ப்பு கருத்துகளைக் கொண்டு பாடல்களையும், இசை நாடகங்களையும் நிகழ்த்தினர். கலை நிகழ்ச்சிகள் பார்வையாளர்களை மிகவும் ஈர்த்தன.

பெரியார் படத்துடன் அன்னை நாகம்மையார், பெரியாரின் சகோதரி கண்ணம்மாள், அன்னை மணியம்மையார், முத்துலட்சுமி (ரெட்டி) ஆகியோரின் படங்கள் அடங்கிய துணிப்பதாகை மேடைக்கு எழுச்சியூட்டியது. 4 மணியிலிருந்தே தோழர்கள் பெண்களும், ஆண்களுமாக கருஞ் சட்டையுடன் குவியத் தொடங்கினர். தோழமை அமைப்பினரும், பொது மக்களும் ஏராளமாக நிகழ்ச்சியில் பங்கேற்றனர். புரட்சிகரப் பாடல்கள், இடையிடையே தோழர்கள் உரை என்று நிகழ்ச்சிகள் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன.

சென்னிமலை கழகத் தோழர் கவிப்பிரியா வரவேற்புரையாற்றினார். மாநாட்டுக்கு முழுமையாக பொறுப்பேற்று செயல்பட்டு மாநாட்டை வெற்றி மாநாடாக்கியதில் பெரும் பங்காற்றிய அரங்கம் பாளையம் மணிமேகலை தலைமை உரையாற்றினார். திருப்பூர் முத்துலட்சுமி, சங்கீதா முன்னிலை வகித்தனர்.

தமிழ்நாடு அறிவியல் மன்ற அமைப்பாளர் சிவகாமி, புரட்சிகர மாணவர் முன்னணியைச் சார்ந்த கண்மணி, பெரியாரியலாளர் ஓவியா, முன்னாள் மத்திய அமைச்சர் சுப்புலட்சுமி, பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், கழகத் தலைவர் கொளத்தூர் மணி உரையாற்றினர். மாநாட்டுக்கு முன்னின்று உழைத்த இராசிபுரம் கழகத் தோழர் சுமதி நன்றி கூறினார்.

மாநாட்டில் நாமக்கல் மாவட்டம் குமார பாளையம் திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் கழகக் கட்டமைப்பு நிதியின் முதல் தவணையாக கழகப் பொறுப்பாளர்கள் ரூ10,000/-த்தை கழகத் தலைவரிடம் வழங்கினர். குமாரபாளையம் மு.கேப்டன் அண்ணாதுரை-பரிமளம் ஆகியோரின் மகள் ஈழக் கனிமலர், தான் சேர்த்து வைத்திருந்த உண்டியல் தொகையை மாநாட்டு நன்கொடையாக வழங்கினார்.

## மாநாட்டு மேடையில் ஜாதி மறுப்புத் திருமணம்

வழமையாக கழக நிகழ்வுகளில் நடக்கும் ஜாதி மறுப்புத் திருமணம் ஈரோடு பெண்கள் சுயமரியாதை மாநாட்டு மேடையிலும் நடந்தது. திருமணத்தை உறுதிமொழி கூறி நடத்தி வைத்த கழகத் தலைவர் கொளத்தூர் மணி, ‘இந்தத் திருமணம் ஜாதி ஆணவம் பேசும் ஜாதியைச் சார்ந்த பிற்படுத்தப்பட்டவருக்கும் தாழ்த்தப்பட்டவருக்கும் நடக்கும் திருமணம்” என்று பலத்த கரவொலிக்கிடையே அறிவித்தார்.

சேலம் மாவட்டம் ஓமலூர் வட்டம் திண்ணப்பட்டி கிராமம் தங்கவேலு-வெண்ணிலா இணை யரின்மகன் பிரபாகரன், ஓமலூர் வட்டம் பண்ணபட்டி கிராமம் குணசேரகன், இலட்சுமி இணையரின் மகள் நந்தினி ஆகியோர் மாலை மாற்றி இருவரும் இணைந்து வாழ்க்கை ஒப்பந்த உறுதிமொழியை ஏற்றனர்.




## கழகம் துணை நிற்கும்

ஈரோடு மாநாட்டு மேடையில் மற்றொரு நிகழ்வும் நடந்தது. 10 ஆண்டுகளுக்கு முன் ஜாதி மறுப்புத் திருமணம் செய்து கொண்ட ரவிக்குமார்-ஜோதி இணையரை குடும்பத்தினர் ஒதுக்கி வைத் திருந்தனர். பத்து ஆண்டுகளுக்குப் பிறகு பெண்ணின் பெற்றோர்களான பாலசுப்பிரமணியன்-மீனாட்சி, திருமணத்தை அங்கீகரித்து இருவரையும் குடும்பத்தில் இணைத்துக் கொண்டனர். இதனால் பெண்ணின் பெற்றோரை அவரது ஜாதியினர் (பிற்படுத்தப்பட்ட ஜாதி) சமூகத்திலிருந்து விலக்கி வைத்துள்ளனர். இந்த நிலையில் ஜாதி விலக்குக் குள்ளான பெற் றோர்களையும் ஜாதி மறுப்புத் திருமணம் செய்து கொண்ட இணை யர்களையும் மேடையில் ஏற்றி “இங்கே திரண் டிருக்கும் கழகக் குடும்பங்கள் இவர்களுக்கு என்றும் துணை நிற்கும்” என்று கழகத் தலைவர் கொளத்தூர் மணி அறிவித்தார். வேறு மிரட்டல்கள் வந்தாலும் அதை கழகம் எதிர்கொள்ளும் என்றும் அறிவித்தார். பலத்த கரவொலி எழுப்பி கூட்டத்தினர் ஆதரவை வெளிப்படுத்தினர்.



## பறி போகும் தமிழர் கல்வி, வேலை வாய்ப்புகள் குறித்து மாணவர்களிடையே துண்டறிக்கை; மண்டல மாநாடுகள்; டிசம்பர் 29இல் சேலத்தில் தலைமை செயற்குழுக் கூட்டம்

# ஈரோட்டில் கூடிய தலைமைக் குழு முடிவுகள்

திராவிடர் விடுதலைக் கழக தலைமைக் குழு கூட்டம் டிசம்.16, 2017 காலை 11 மணியளவில் ஈரோட்டில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் முன்னிலையில் கூடியது. கழகப் பொறுப்பாளர்கள் கடந்த அக்டோபரில் மாவட்டம் தோறும் சுற்றுப்பயணம் செய்து கழகக் கலந்துரையாடல் கூட்டம் நடத்தியதைத் தொடர்ந்து மாவட்ட வாரியாக கழக செயல்பாடுகள் குறித்து கழகப் பொறுப்பாளர்கள் தலைமைக் குழுவில் கருத்துகளை முன் வைத்தனர். செயல்பாடுகள் இல்லாத கழக அமைப்புகள் - செயல்படக் கூடிய கழக அமைப்புகள் - அமைப்புகளில் நிலவும் பிரச்சினைகள் குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டது. கழக செயல்பாடுகளை மேலும் தீவிரமாக்குவது குறித்தும் விவாதிக்கப் பட்டது.

கழகத்தின் அடுத்தகட்ட நடவடிக்கைகள் குறித்தும் தலைமைக்குழு விவாதித்தது. குறிப்பாக தமிழ்நாட்டில் நடுவண் ஆட்சி தலையீட்டால், தமிழக இளைஞர்களை கடுமையாகப் பாதிக்கும் வேலை வாய்ப்புகள், தமிழக தேர்வாணையத்தின் அறிவிப்புகள், நீட் திணிப்பால் உருவாகியுள்ள நெருக்கடிகள், பாலிடெக்னிக் விரிவுரையாளர்களாக பிற மாநிலத்தவர்களை தேர்வு செய்தல், மத்திய அரசு பதவிகளில் பிற்படுத்தப்பட்டோருக்கான 27 சதவீத இடஒதுக்கீட்டில் பாதியளவுகூட நிரப்பப்படாமல் இருக்கும் அவலம் - இவைகளை விளக்கி கல்லூரி களின் வாயில்களிலும், தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப் பட்ட மாணவர் விடுதிகளிலும் விழிப்புணர்வூட்டும் வெளியீடுகள், துண்டறிக்கைகளை வழங்கவும் வாயிற் கூட்டங்களை நடத்தவும் முடிவு செய்யப் பட்டது.

தமிழ்நாடு மாணவர் கழகத் தோழர்கள் இந்தப் பணியை கழகப் பொறுப்பாளர்களுடன் கலந்து பேசி செயல்படுத்துவது என முடிவெடுக்கப்பட்டது. இதற்கான பொறுப்பாளர்களும் நியமிக்கப்பட்டனர். சேலம், தருமபுரி மாவட்டங்களில் மாணவர்களை சந்திக்கும் திட்டத்துக்கு நாகராஜன், திருப்பூர் மாவட்டத்துக்கு தேன்மொழி, கனல்மதி, பிரசாந்த், கோவை மாவட்டத்துக்கு வைத்தீஸ்வரி, திருவண்ணா மலை, விழுப்புரம் மாவட்டத்துக்கு வினோத், காஞ்சிபுரம், வேலூர் மாவட்டங்களுக்கு குடியாத்தம் சிவா, சென்னை மாவட்டத்துக்கு ஜெயப்பிரகாஷ், விருதுநகர் மாவட்டத்துக்கு பெ. இராமநாதன், நாமக்கல் மாவட்டத்துக்கு மனோஜ் ஆகியோர் பொறுப்பாளர்களாக நியமிக்கப்பட்டனர். பிற மாவட்டங்களுக்கான பொறுப்பாளர்கள் விரைவில் அறிவிக்கப்படுவார்கள்.

தமிழக மாணவர்களின் கல்வி, வேலை வாய்ப்பு உரிமைகளை வலியுறுத்தும் மண்டல மாநாடுகளை நடத்துவது எனவும் முடிவு செய்யப்பட்டது.

டிசம்பர் 29ஆம் தேதி கழக தலைமை செயற் குழுவை சேலத்தில் கூட்டுவது என்றும் முடிவு செய்யப்பட்டது.

# அரசு தேர்வாணையத்தைக் கண்டித்து ஆர்ப்பாட்டங்கள்!

*தமிழ்நாட்டின் அரசுப் பணிகளுக்கு பிற மாநிலத்தவரும் விண்ணப்பிக்கலாம் என்று தமிழ்நாடு அரசு தேர்வாணையத்தின் அறிவிப்புக்கு கண்டனம் தெரிவித்து கழகம் ஆர்ப்பாட்டங்களை நடத்தியது.*

**திருச்சி :** திருச்சி மாவட்ட கழகச் சார்பாக 14.12.2017 வியாழன் காலை 10.30 மணிக்கு தமிழ்நாடு அரசு பணி தேர்வாணையத்தைக் கண்டித்து, அண்ணா சிலை




அருகில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்திற்கு பெரம்பலூர் மாவட்டத் தலைவர் துரை. தாமோதரன் தலைமை வகித்தார். பல் மருத்துவர் எஸ்.எஸ். முத்து, திருவரங்க நகரச் செயலாளர் அசோக் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கருத்துரை வழங்கியோர்: செந்தில் (இளந்தமிழகம்), வின்செட் (மாநகரத் தலைவர், த.பெ.தி.க.), பாலாஜி (மாவட்ட ஒருங்கிணைப்பாளர் மே 17 இயக்கம்), வழக்குரைஞர் தமிழழகன் (ஆசிரியர், ‘தமிழ்க்காவிரி’), அன்பழகன் (பெரியார் பாசறை), பஷீர் அகமது (மக்கள் உரிமை மீட்பு இயக்கம்), வழக்குரைஞர் பொற்கொடி ஆகியோர். டார்வின்தாசன் (கழக மாவட்ட இணை ஒருங்கிணைப்பாளர்) நன்றியுரையாற்றினார். தோழர்கள் குணா, முருகானந்தம், மு.மனோகரன், டிவி.மெக்கானிக் மணி, அவரது துணைவியார், டார்வின், அவரது துணைவியார், இளந்தமிழகம் வாசிம், மா.பெ.பொ.க.மாவட்டசெயலாளர் கலிய பெருமாள் மற்றும் தோழர்கள் பங்கேற்றனர். த. புதியவன் (கழக மாவட்ட இணை ஒருங் கிணைப்பாளர்) நிகழ்ச்சியை ஒருங்கிணைத்தார்.

**சேலம் :** 07.12.2017 வியாழக்கிழமை மாலை 4 மணிக்கு சேலம் தலைமை தபால் நிலையம் முன்பு சேலம் மாவட்ட கழகத்தின் சார்பாக தமிழக இளைஞர்களின் வேலைவாய்ப்புகளை வடநாட்டாருக்குத் தாரைவார்க்கும் தமிழக அரசுப் பணியாளர் தேர்வாணையத்தைக் கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமை ஏற்றார். சேலம் கிழக்கு மாவட்ட கழகச் செயலாளர் இரா. டேவிட் முன்னிலை வகித்தார். கண்டன ஆர்ப்பாட்டத்தில் சி.பி.எம் மாவட்ட செயலாளர் பி. தங்கவேல், சி.பி.ஐ மாவட்ட செயலாளர் எ. மோகன், த.மு.மு.க மாவட்ட பொறுப்புக் குழுத் தலைவர் பி. யூனுஸ் அகமத், சேலம் மேற்கு மாவட்ட கழகச் செயலாளர் சி. கோவிந்தராசு ஆகியோர் கண்டன உரை நிகழ்த்தினார்கள்.




நிறைவாக கழகத் தலைவர் கொளத்தூர் மணி கண்டன ஆர்ப்பாட்டத்தை விளக்கி உரை நிகழ்த்தினார். கிழக்கு மாவட்ட கழகப் பொருளாளர் பெருமாள் நன்றி கூற ஆர்ப்பாட்டம் நிறைவுற்றது. இந்நிகழ்வில் சேலம், ஏற்காடு, இளம்பிள்ளை, ஆத்தூர், நங்கவள்ளி, மேட்டூர் ஆர்.எஸ், மேட்டூர், கொளத்தூர், காவலாண்டியூர், காவேரி கிராஸ் பகுதி தோழர்கள் கலந்து கொண்டனர்.

**நாமக்கல் :** தமிழர் வேலைவாய்ப்பை பிற மாநிலத்தவருக்கு தாரைவார்க்கும் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தைக் கண்டித்து டிச-12ந்தேதி, மாலை 4.00மணிக்கு, நாமக்கல் மாவட்டம், குமாரபாளையத்தில் கழகத்தின்




சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்பாட்டத்திற்கு குமாரபாளையம் நகரத்தலைவர் தண்டபாணி தலைமையேற்றார். மாவட்ட துணைத் தலைவர் திராவிடமணி முன்னிலை வகித்தார். நிகழ்வில் மதிமுக பொறுப்பாளர் விசுவநாதன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கேசவன், திராவிடர் கழக மாவட்ட செயலாளர் சரவணன், தமிழ் தேசிய பேரியக்கம் ஆறுமுகம், திவிக மாவட்ட கழகப் பொறுப்பாளர்கள் சாமிநாதன், சரவணன், வைரவேல் உள்ளிட்டோர் கண்டன உரையாற்றினார்கள். இறுதியாக திருச்செங்கோடு பகுதி பொறுப்பாளர் கவுதமன் நன்றி கூறினார்.

**விழுப்புரம் :** 09-12-17 அன்று மாலை மாவட்டக் கழகம் சார்பில் தமிழக வேலைவாய்ப்புகளை வடநாட்டுக்கு தாரை வார்க்காதே என்று தமிழ்நாடு தேர்வாணையத்தைக் கண்டித்து ஆர்ப்பாட்டம் விழுப்புரம் பழைய பேருந்து நிலையம் அருகில் நடைபெற்றது. கிழக்கு மாவட்டத் தலைவர் பூ.ஆ இளையரசன் தலைமை உரைக்குபின் மீனவர் விடுதலை வேங்கைகள் தலைவர் மங்கையர் செல்வன், கோகுல்காந்திநாத், விழுப்புரம் மருதம் இரவிகார்த்திகேயன், பெரியார் சிந்தனை முன்னணித் தலைவர் தீனா, மேற்கு மாவட்ட தலைவர் மதியழகன், மாவட்ட செயலாளர் இராமர், தலித் பாதுகாப்பு இயக்கத் தலைவர் பிரகாஷ் கண்டன உரையாற்றினார்கள்.

மாவட்ட ஒருங்கிணைப்பாளர் பெரியார் ஜெயரட்சகன், பெரியார் வெங்கட், அறிவியல் மன்ற அமைப்பாளர் நாகராஜ், விழுப்புரம் அஜித், மற்றும் கலைக் கல்லூரி மாணவர்கள், தமுமுக மஜித், லாஸ்பேட் மாணிக்கம், சுனில், தினேஷ் மற்றும் மேற்கு மாவட்ட கழகத் தோழர்கள், விழுப்புரம் பகுதி தோழர்களும் திரளாகக் கலந்து கொண்டனர்.



# மாநிலங்களின் மருத்துவத் துறையிலும் டில்லியின் அதிகாரப் பறிப்பு

**சமூக நீதிக்கான மருத்துவர் சங்கத் தலைவர் இரவீந்திர நாத் அறிக்கை**

2012இல் மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம் மூலம் தேர்வு வைத்து 11,000 செவிலியர்களைத் தமிழக அரசின் சுகாதாரத் துறை நியமனம் செய்தது. அவர்களுக்கு மாதம் ரூ.7,700 தொகுப்பூதியம் வழங்கப்படுகிறது. கடும் பணிச்சுமை, குறைந்த சம்பளம், வாழ்வாதாரப் பிரச்சினைகள் என்று அல்லாடிக் கொண்டிருக்கிறார்கள் செவிலியர்கள். பணி நியமனத்தின்போதே அவர்களை நிரந்தர அடிப்படையில் நியமிக்காமல், ஒப்பந்த அடிப்படையில் நியமித்தது. மத்திய அரசின் தேசிய சுகாதார இயக்கம் மூலம் இவர்கள் நியமிக்கப்படு கிறார்கள் என்று அதற்குக் காரணமும் சொன்னது.

இது ஒரு மிக முக்கியமான கேள்வியை எழுப்புகிறது. மாநில அரசின் கட்டுப்பாட்டில் உள்ள மருத்துவமனைகளுக்குப் பணி நியமனம், ஊதியம் வழங்கல் போன்ற விஷயங்களில் ஏன் மத்திய அரசு நேரடியாகத் தலையிடுகிறது? இது மாநில அரசுகளின் உரிமைகளைப் பறிக்கும் செயலல்லவா? இந்த உரிமை பறிப்புக்கு ஏன் மாநில அரசு உடன்பட்டது என்று புரியவில்லை. பணியாளர் நியமனத்தில் மாநில உரிமை பறிக்கப்படுவது என்பது கூட்டாட்சிக் கோட்பாட்டுக்கு எதிரானது. மாநிலங்களின் பட்டியலில் உள்ள நல்வாழ்வுத் துறையைப் படிப் படியாகப் பொதுப் பட்டியலுக்குக் கொண்டுச் சென்று, இறுதியில் அது மையப்பட்டியலுக்குக் கொண்டு செல்லப்படலாம் எனும் அச்சத்தை இது உருவாக்கியிருக்கிறது.

உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைக்காக உறுப்புகளைப் பெற விரும்புவோர் பட்டியலைப் பராமரிப்பது, அரசு மருத்துவமனைகளின் படுக்கைகளைத் தனியாருக்கு விடுவது, தனியார் நிறுவனங்கள் மருத்துவமனைகள் கட்டிக்கொள்ள அரசு மருத்துவமனை இடங்களை வழங்குவது போன்றவற்றை மத்திய அரசு தேசிய நலக்கொள்கை மூலமும், தேசிய சுகாதார இயக்கம் மூலமும், நிதி ஆயோக் மூலமும் மாநில அரசுகளின் மீது திணிக்கிறது.

மத்திய அரசின் இந்தக் கொள்கைகளுக்குப் பின்னால் உலக வங்கியும் சர்வதேச நிதி மூலதனமும் உள்ளன. சர்வதேச நிதி மூலதனம், தொழில் துறைகளில் முதலீடு செய்வதைவிட சேவைத் துறைகளில் முதலீடு செய்ய விரும்புகிறது. சேவைத் துறைகளில் முதலீடு செய்வதன் மூலம் மிக விரைவாகவும் மிக அதிகமாகவும் லாபம் ஈட்ட முடியும் என்பதுதான் இதற்குக் காரணம்!

இரண்டாம் உலகப் போருக்கு முன்பாக சேவைத் துறைகளில் வர்த்தகம் என்பது மிகக் குறைவாகவே இருந்தது. ஆனால், அந்த நிலைமை மாறிவிட்டது. குறிப்பாக, 2002-க்குப் பிறகு, மொத்த வர்த்தகத்தில் நான்கில் ஒரு பங்காக உயர்ந்துவிட்டது. சேவைத் துறையில் வணிகமயமாக்கலுக்கான பொது உடன்பாடு இதற்கான வாய்ப்பை அதிகரித்து விட்டது. சர்வ தேச நிதி மூலதனத்தின் லாபப் பசியைத் தீர்க்கும் வகையில், மத்திய அரசு வகுக்கும் கொள்கைகளின் விளைவுகள் மாநில அரசுகளின் தலையில் விழுகின்றன.

இதில் பலிகடா ஆக்கப்பட்டவர்களில் செவிலியர்களும் அடக்கம். அரசின் அடக்குமுறையையும் கொட்டும் மழையையும் தாண்டி அவர்கள் நடத்திய உள்ளிருப்புப் போராட்டத்தின் பின்னணி இதுதான். பணி நிரந்தரம் செய்யப்பட வேண்டும், எட்டு மணி நேரம் மட்டுமே பணி என்பதை நடைமுறைப்படுத்த வேண்டும், எதிர்காலத்தில் ஒப்பந்த முறையில் பணி நியமனம் செய்யக் கூடாது எனும் கோரிக்கைகளைத் தான் அவர்கள் முன்வைக்கிறார்கள்.

தமிழக அரசோ அனைவருக்கும் பணிநிரந்தரம் உடனடியாகத் தர முடியாது. நிரந்தர செவிலியர்களுக்கான பணியிடங்கள் காலியாகும்போதுதான் படிப்படியாகப் பணிநிரந்தரம் தர முடியும் என்கிறது. நினைத்துப் பாருங்கள். ரூ. 7,700 சம்பளத்தை வைத்துக் கொண்டு இன்றைய விலைவாசியில் எப்படி வாழ்க்கையை நடத்த முடியும்? செவிலியர்களுக்குக் குறைந்தபட்ச ஊதியமாக மாதம்தோறும் ரூ. 20,000 வழங்க வேண்டும் என்று உச்ச நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்ட குழுவே கூறியுள்ளது. ஆனால், அதை அரசு கருத்தில் கொள்ளவில்லை.

'போதிய நிதி இல்லை; மக்கள் நல்வாழ்வுத் துறைக்காக ஒதுக்குகின்ற நிதியை முழுவதுமாக ஊழியர்களின் ஊதியத்துக்காக வழங்க முடியுமா?' என்று கேட்கிறது தமிழக அரசு. கடந்த ஏழு ஆண்டுகளில் தனியார் மருத்துவமனைகள், முதல்வர் காப்பீடு திட்ட நிதி மூலம் ரூ. 2,500 கோடி லாபம் ஈட்டியுள்ளன. அரசு மருத்துவமனைகளில் வழங்கப்படும் சிகிச்சைகளுக்குக்கூட, ஏன் தனியார் மருத்துவமனைகளை நோக்கி மக்களை விரட்ட வேண்டும்?

சில தனியார் மருத்துவமனைகளுக்கும் நேரடியாக நிதியை அரசு வழங்குகிறது. மருந்துகள், உபகரணங்கள் எல்லாவற்றையும் தனியார் நிறுவனங்களிடமிருந்து அதிக விலையில் கொள்முதல் செய்கிறது. ஏன் பொதுத் துறை நிறுவனங்கள் மூலமாக இவற்றைக் குறைந்த விலையில் உற்பத்தி செய்ய கூடாது? மருத்துவச் செலவில் 80% மருந்துகளுக்குத்தான் செல்கிறது. இந்த செலவினத்தைக் குறைக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்தது?

மக்கள் நல்வாழ்வுத் துறைக்கான நிதியை மிகக் குறைவாக ஒதுக்கும் நாடுகளில் இந்தியாவும் ஒன்று. மத்திய - மாநில அரசுகள் மக்கள் நல்வாழ்வுத் துறைக்காக ஒதுக்கும் நிதி மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 1.04% மட்டுமே. இதை 6% ஆக்க வேண்டும் என்று உலக சுகாதார நிறுவனம் வலியுறுத்தியிருக்கிறது.

இந்த வழிகாட்டலின் அடிப்படையில் நிதி ஒதுக்கீட்டை அதிகப்படுத்தினால், நாட்டு மக்கள் அனைவருக்கும் தரமான இலவச சிகிச்சையை வழங்குவதோடு அனைத்து மருத்துவத் துறை ஊழியர்களுக்கும் நிரந்தர வேலைவாய்ப்பையும் நியாயமான ஊதியத்தையும் வழங்க முடியும். இன்னொரு விஷயம். கேரளம் உள்ளிட்ட சில மாநிலங்கள் மத்திய அரசு வழங்கும் ஊதியத்துடன் கூடுதலாக நிதி ஒதுக்கி செவிலியர்களுக்கு ரூ.20 ஆயிரம் வழங்குகின்றன. இதைத் தமிழக அரசு பின்பற்றுவதில் என்ன பிரச்சினை?

போராட்டத்தைக் கைவிட்டு பணிக்குத் திரும்புமாறு சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டதை யடுத்து, செவிலியர்கள் தங்கள் போராட்டத்தைக் கைவிட்டிருக்கிறார்கள். தங்களது கோரிக்கைகள் பரிசீலிக்கப்படும் என்று அதிகாரிகள் அளித்த உறுதிமொழியை அவர்கள் நம்புகிறார்கள். அவர்களது கோரிக்கை நிறைவேறுவது அரசின் கைகளில்தான் இருக்கிறது! ●

## தீர்ப்புக்குப் பிறகு கவுசல்யா பேட்டி

# "வழக்கை நடத்த வேண்டாம் என்று அழுத்தம் தந்தார்கள்"

உடுமலை சங்கர் கொலை வழக்கில் திருப்பூர் நீதிமன்றம் குற்றம்சாட்டப்பட்ட 6 பேருக்கு மரண தண்டனை விதித்திருக்கிறது. மூவர் விடுதலை; ஒருவருக்கு இரட்டை ஆயுள் தண்டனையை தனி நீதிமன்றம் வழங்கியிருக்கிறது.

'சங்கரின் மரணத்துக்கு நீதி கிடைத்திருக்கிறது' என்று கவுசல்யா தீர்ப்பை வரவேற்றிருக்கிறார். தீர்ப்புக்குப் பிறகு 'இந்து' ஆங்கில நாளேடு கவுசல்யாவின் பேட்டியை (டிச.18) வெளியிட்டிருக்கிறது. பேட்டி விவரம்:

கேள்வி : சமூகத்தில் ஜாதியின் செல்வாக்கு மறைந்து வருகிறது. அங்கொன்றும் இங்கொன்றுமாக நடக்கும் சில வன்முறை சம்பவங்களை பெரிதுபடுத்துவது தேவை யில்லாதது என்ற கருத்துப் பற்றி நீங்கள் என்ன கூறுகிறீர்கள்?

கவுசல்யா: அது உண்மையல்ல. ஜாதியப் பாகுபாடுகளை நிலைநிறுத்தத் துடிப்பவர்கள் தான் இத்தகைய கருத்துகளைக் கூறி வருகிறார்கள். சில நேரங்களில் ஜாதிய பாகுபாடுகள் கொலை செய்யும் அளவுக்கு அவர்களைத் தூண்டி விடுகிறது. ஜாதியப் பாகுபாடு சமூகத்தில் இப்போதும் இருந்து கொண்டிருக்கிறது என்பதே உண்மை.

கேள்வி: ஜாதி வெறிக்குக் கணவரைப் பலி கொடுத்திருக்கிறீர்கள். குற்றவாளிகளாக உங்கள் பெற்றோரே இருக்கும்போது இந்த வழக்கை நடத்துவதில் நீங்கள் எதிர்கொண்ட சவால்கள் என்ன?

கவுசல்யா: இந்த வழக்கை நடத்த வேண்டாம் என்றே பலரும் எனக்கு அறிவுரை கூறினார்கள். நீ உன்னுடைய கணவரை இழந்து விட்டாய்; பெற்றோர்களையும் குற்றக் கூண்டில் ஏற்றுவதில் என்ன கிடைத்துவிடப் போகிறது ? வழக்கை நடத்த வேண்டாம், விட்டுவிடு என்றுதான் கூறினார்கள். நான் மனித உரிமை மீறல்களுக்கு எதிராகப் போராடத் தொடங்கிவிட்டதை அவர்களால் ஏற்க முடியவில்லை. ஆனால் என்னுடைய வலியை நான் மட்டுமே சுமந்தேன். அவர்களுக்கு இந்த வலி பற்றி ஏதும் தெரியாது.

கேள்வி: நீங்கள் வழக்கை நடத்துவதில் உறுதி காட்டினாலும் உங்கள் பெற்றோருக்கு எதிராகவே வழக்கை நடத்தியது, ஒருசோதனை முயற்சிதானே? நீங்கள் உங்கள் பெற்றோருக்கு எதிராக சாட்சி கூற வேண்டியிருந்ததே?

கவுசல்யா : எனது கணவருக்கு நீதி கிடைக்க வேண்டும் என்று நான் விரும்பினேன். அதற்காக எந்த எல்லைக்கும் செல்ல நான் தயாராக இருந்தேன்.

கேள்வி : இந்தக் கடுமையான பயணத்தில் உங்களுக்கான வலிமையைத் தந்தது எது? தனிமனிதர்களோ அல்லது நூல்களோ உங்களிடம் தாக்கத்தை உருவாக்கியதா?

கவுசல்யா : இந்த சம்பவத்துக்குப் பிறகு பலரும் என்னைச் சந்தித்து ஆதரவுதர முன் வந்தார்கள். அவர்கள் பல்வேறு இயக்கங்களைச் சார்ந்தவர்கள். அவர்கள் எனக்கு நம்பிக்கையூட்டினார்கள். வழக்கிற்கு துணை நின்றார்கள். ஒன்று அல்லது இரண்டு பேரை மட்டுமே சுட்டுவது, எனனைப் பொருத்தவரை சரியாக இருக்காது. பலரும் உதவினார்கள். நான் பல்வேறு நூல்களைப் படித்தேன். அவற்றின் கருத்துகள் என்னை செழுமைப்படுத்தின.

கேள்வி : ஜாதி ஆணவக் கொலையைத் தடுக்க தனிச்சட்டம் வேண்டும் என்று நீங்கள் வற்புறுத்தி வருகிறீர்கள். ஏற்கனவே இதற்காக சட்டங்கள் இருக்கும்போது தனிச் சட்டம் தேவையா?

கவுசல்யா : சட்டங்கள் இருக்கின்றன. உண்மைதான். ஆனால் அவை முறையாக செயல்படுத்தப்படுவது இல்லை. ஆணவக் கொலைகளுக்கு கடுமையான தண்டனை வேண்டும் என்பதற்காகவே தனிச் சட்டம் வேண்டும் என்று நான் கேட்கிறேன். கடுமையான சட்டங்கள் இருக்குமேயானால், இந்த வன்செயலில் ஈடுபடுவோர் அதில் ஈடுபடுவதற்கு முன் ஒன்றுக்கு மேற்பட்ட முறை இதைச் செய்யலாமா வேண்டாமா என்று யோசிப்பார்கள்.

கேள்வி : இப்போது நீங்கள் நடத்தி வரும் 'சங்கர் தனிப் பயிற்சி மய்ய'த்தின் நோக்கம் என்ன?

கவுசல்யா: மாணவர்களுக்கு கல்வியில் உதவுதலே இதன் நோக்கம். பயிற்சி வகுப்புகள் வழியாக அவர்கள் கல்விக்கு நான் உதவுகிறேன். சமூக உணர்வுள்ள பெண்- ஆண் இளைஞர்களை உருவாக்க முடியும் என்று நான் நம்புகிறேன். - என கவுசல்யா கூறினார்.

**ஈரோடு மாநாட்டில் மக்களை ஈர்த்த மக்கள் மன்ற கலை நிகழ்ச்சிகள்**



DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/16-18 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2016-2018
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# குடும்பங்களில் பெண் குழந்தைகளுக்கு சுயமரியாதை உணர்வை ஊட்ட வேண்டும்



ஈரோடு பெண்கள் சுயமரியாதை மாநாட்டில் பங்கேற்று முன்னாள் மத்திய அமைச்சர் சுப்புலட்சுமி பேசுகையில் குறிப்பிட்டதாவது:

“பெரியார் பிறந்த மண்ணில் பெண்கள் சுயமரியாதை மாநாடு வெற்றியுடன் நடந்து கொண்டிருக் கிறது. நாங்கள் நிகழ்த்துகிற உரைகளை விட இந்த மாநாட்டின் வெற்றிக்கு காஞ்சி மக்கள் மன்றம் நிகழ்த்திய கலைநிகழ்ச்சிகள் தான் முக்கிய பங்காற்றியிருக்கிறது என்று கூறுவேன். அவ்வளவு சிறப்பாக கருத்துகளை இசையாக - கலை நிகழ்வுகளாக வழங்கினர். அவர்களைப் பாராட்ட கடமைப்பட் டிருக்கிறேன்.

பெண்கள் மாநாடுகளை தொடர்ந்து திராவிடர் விடுதலைக் கழகம் நடத்தி வருவது அறிந்து மகிழ்ச்சியடைகிறேன்.

தந்தை பெரியாரின் சிந்தனைகள் இன்று உலக நாடுகளால் கவனிக்கப் பட்டு வருகிறது. நான் மத்திய அமைச்சராக இருந்தபோது பல்வேறு மாநிலங்களுக்கு போகும்போது சமூகநீதி என்றால் என்னவென்றே அம்மக்களுக்குத் தெரியவில்லை என்பதை உணர்ந்தேன். தமிழ்நாட்டில் பெரியார் ஆற்றிய தொண்டு, சமூக நீதி பற்றி நான் பங்கேற்கும் நிகழ்ச்சி களில் எல்லாம் தொடர்ந்து பேசுவேன். ஆண், பெண் சமத்துவத்தை வலி யுறுத்திய பெரியார், உடைகளிலும் கூட சமத்துவம் இருக்க வேண்டும் என்றார். தமிழ் நாட்டில் கலைஞர் முதல்வராக இருக்கும் போது பெரியார் கொள்கை வழியில் உள்ளாட்சிகளில் பெண்களுக்கு 30 சதவீத இடஒதுக்கீட்டை அமுல்படுத் தினார். இப்போதெல்லாம் திராவிட இயக்கம் என்ன செய்து விட்டது என்று மனசாட்சி இல்லாமலேயே சிலர் பேசுகிறார்கள். வேறு மாநிலங் களோடு தமிழகத்தை ஒப்பிட்டுப் பார்த்தால் இப்படி எல்லாம் பேச மாட்டார்கள். உண்மையான பொதுத் தொண்டுக்கு சுயமரியாதை உணர்வு மிகவும் அடிப்படையானது. ஒரு தாய் ஒரு பெண்ணை வளர்க்கும் போதே சுயமரியாதை உணர்வை ஊட்டி வளர்க்க வேண்டும். ஆண்களுக்கு என்று ஒரு வேலை; பெண்களுக்கு என்று ஒரு வேலை என்று சமூகம் பிரித்துப் பார்க்கிறது. ‘மனு தர்மம்’ கட்டமைத்த சிந்தனையிலிருந்து இந்த பாகுபாடு தொடங்கு கிறது. பெரும்பாலான மக்களை மனுதர்மம் ‘சூத்திரர்’ என்று இழிவுபடுத்தியது. ‘சூத்திரர்கள்’ பெண்களை தங்களுக்குக் கீழே அடிமையாகவே வைத்திருந்தனர். சூத்திரர் இழிவை எதிர்த்த பெரியார், பெண்களின் உரிமைக்கும் குரல் கொடுத்தார். பெண்களுக்கான கல்வி வழங்கப் படுவதே பெண்ணுரிமைக்கான அடிப்படை. பெண் கல்வி தான் பெண்களுக்கு தன்னம்பிக்கையை யும் துணிவையும் ஊட்டுகிறது. குடும்பங்களில் பெண் குழந்தைகள் என்றால் இப்படித்தான் இருக்க வேண்டும் என்று வளர்க்காமல் ஆண்பெண் பாகுபாடு காட்டாமல், பெண்களை வளர்க்க வேண்டும்; பெண்களுக்கான சுயமரியாதையை வலியுறுத்தும் இத்தகைய மாநாடுகள் மிகவும் அவசியமானவை” என்றார் முன்னாள் அமைச்சர் சுப்புலட்சுமி.

## ‘பூப்புனித’ சடங்குகளை பெண்கள் புறக்கணிக்க வேண்டும்

மாநாட்டில் உரையாற்றிய பெரியாரியலாளர் ஓவியா இந்த மாநாட்டை பெண்களே முன்னின்று நடத்திக் காட்டியதைப் பாராட்டினார். “பெண்களுக்கான



சுயமரியாதை மாநாடாக இந்த மாநாடு நடக்கிறது. சுயமரியாதை என்ற சொல்லுக்குள்ஆழமான அர்த்தங்கள் அடங்கியிருக் கின்றன. எந்த விலங்குகளும் தங்களைக் கீழான விலங்குகளாக தாழ்த்திக் கொள்வது இல்லை. ஆனால், இந்த சமூகம் ஒரு பிரிவினரை உயர் வாகவும் மற்ற பிரிவினரை தாழ் வாகவும் கற்பிதம் செய்திருக்கிறது. பெரியார் இலட்சியங்களிலேயே முதன்மை யானது இரண்டு. ஒன்று ஜாதி ஒழிப்பு; மற்றொன்று பெண்ணுரிமை. இரண்டுக்குமே அடிப்படையானது சுயமரியாதை” என்றார் ஓவியா.

“ஆண்மையை கொண்டாடு வதும், ‘வீரம்’ ஆண்களுக்கே உரித் தானது என்றும், பெண் என்றால், அவள் தியாகம் செய்யக் கூடிய வளாக இருக்கவேண்டும் என்றும் சமூகம் கற்பிதங்களை பொதுப் புத்தியில் திணித்து வைத்திருக் கிறது” என்று கூறிய ஓவியா, “இப்போதும் திருமண வீடுகளில்கூட பெண்களை தரையிலும் ஆண்களை நாற்காலியிலும் அமர வைக்கிறார்கள்” என்றார்.

“ஆண்களை மகிழ்ச்சிப்படுத்து வதற்காகவே பெண்கள் தங்களை அலங்கரித்துக் கொள்ள வேண்டி யவர்களாக இருக்கிறார்கள். ‘பெண்களை மகிழ்ச்சிப்படுத்து வதற்கு ஆண்கள் எதையாவது செய்கிறார் களா ?’ என்று பெரியார் கேட்டார்.

நம்பிக்கைகளும் சடங்குகளும் கூட பெண்களின் சுயமரியாதைக்கு எதிரானதாகவே உள்ளன. ஒரு பெண் குழந்தை சாமியாடுவதற்கு பழக்கப் படுத்தப்படுகிறாள். சாமி வந்து ஆடுவோர் பெரும்பாலும் பெண் களாகவே இருக்கிறார்கள். பில்லி சூன்யக்காரி என்று பெண்கள் மீது பழி சுமத்தி, சமூகம் அவளை தண்டனைக் குள்ளாக்குகிறது.

பெண்கள் மீது ‘பூப்படைந்து’ விட்டாள் என்பதற்கு ஒரு சடங்கைத் திணிக்கிறார்கள். மனித உடல் வளர்ச்சியில் உறுப்புகளின் மாற்றங்கள் இயற்கையானவை. ஆண்-பெண் இருபாலருக்கும் இது நடக்கிறது.ஆனால் பெண் வயதுக்கு வந்து விட்டாள்; பூப்பெய்து விட்டாள் என்று கூறி ஒரு சடங்கு நடத்தி, ஊருக்கு அறிவிப்பது பெண்ணின் சுயமரியாதைக்கு இழுக்கு அல்லவா ? உடல் உறுப்பில் ஏற்படும் மாற்றங்கள் குறித்து அந்தப் பெண் ணுடன் பெற்றோர்கள் உரையாடல் எதையும் நிகழ்த்துவது இல்லை. பூப்பெய்தும் சடங்குகளை எனக்கு நடத்தக் கூடாது என்று பெண்கள் துணிவோடு எதிர்க்க வேண்டும்” என்றார் ஓவியா.

பெரியார் காங்கிரசில் இருந்த போது இதே ஈரோட்டில்தான் கள்ளுக் கடை மறியலில் பெரியார் துணைவியார் நாகம்மையாரும், சகோதரி கண்ணம்மா வும் தடையை மீறி ஈடுபட்டனர். மறியலை நிறுத்த வேண்டும் என்று காந்தியாரிடம் கேட்டபோது, ‘அது என் கையில் இல்லை; ஈரோட்டில் இருக்கும் இரண்டு பெண்களிடம்தான் இருக்கிறது’ என்று காந்தி கூறியதாக வரலாற்றுக் குறிப்பு இருக்கிறது. வைக்கத்தில் நடந்த போராட்டத்திலும் பெரியார் குடும்பப் பெண்கள் ஈடுபட்டார்கள். மழை பெய்த போதும் கலையாமல் போராடினார்கள். மறியலின்போது நாகம்மையார், கண்ணம்மாவிடம் காவல்துறை ஜாதி கேட்டபோது எதற்காகக் கேட் கிறார்கள் என்பதைப் புரிந்து, ஜாதியை வெளிப்படுத்த மறுத்தனர். “தீண்டப்படாத” ஜாதியாக இல்லா விட்டால் சாலையை கடக்க அவர்களை அனுமதிக்க காவல்துறை திட்டமிட்டது.

டாக்டர் முத்துலட்சுமி மருத்துவம் படிக்க முன்வந்தபோது, சக மாணவர் களின் பெற்றோர்கள் ஒரு பெண்ணுடன் சேர்ந்து மருத்துவம் படிக்க முடியாது என்று எதிர்ப்பு தெரிவித்தனர். பிரிட்டிஷ் அதிகாரி யிடம் பிரச்சினை சென்ற போது சக மாணவர்கள் படிக்கா விட்டாலும் பரவாயில்லை; ஒரு பெண் மருத்துவராகட்டும் என்று பிரிட்டிஷ் அதிகாரிகள் கூறி எதிர்ப்புகளை புறந்தள்ளினர். வகுப்பறையிலேயே முத்துலட்சுமி மட்டும் முழு திரைப் போட்டு மாணவர்கள் கண்களுக்குப் படாமல் தனிமைப்படுத்தப்பட்டார்.

மருத்துவம் படித்தும் மருத்துவ சேவையை அவரால் வழங்க முடியவில்லை. ‘பரவாயில்லை சமூக நோயைக் குணப்படுத்தும் சேவையை நான் தொடருகிறேன்’ என்றார் டாக்டர் முத்துலட்சுமி. தேவதாசி முறையை ஒழிப்பதற்கு அவர்தான் முன்னின்று சட்டம் கொண்டு வரச்செய்தார்.

ஒரு நாத்திகர் இயக்கத்துக்கு பெரியாருக்குப் பிறகு தலைமை தாங்கி வழி நடத்தியவர் அன்னை மணியம்மையார். அவர்தான் காவிக் கூட்டத்துக்கு பதிலடி தரும் வகையில் ராமன், சீதை உருவங்களை தீயிட்டு ‘ராவணலீலா’வை நடத்திக் காட் டினார், என்று சுயமரியாதைக்காகப் போராடிய பெண்களின் வரலாறு களை நினைவு கூர்ந்தார் ஓவியா.

## பெண்களே களப்பணியாற்றிய மாநாடு



ஈரோடு பெண்கள் சுயமரியாதை மாநாட்டின் தனிச்சிறப்பு, மாநாட்டுப் பணிகளை முழுமையாக பெண்களே மேற்கொண்டது தான். பல்வேறு ஊர்களுக்குச் சென்று கழகத் தோழர்களை சந்தித்து, மாநாட்டுக்கு அழைப்பு விடுத்தது; நன்கொடை திரட்டியது; விளம்பரப்பணி என அனைத்து பணிகளையும் பெண்களே முன்னின்று நடத்தியது இம்மாநாட் டின் தனிச் சிறப்பாகும். மாநாட்டில் உரையாற்றிய பலரும் இதை சுட்டிக் காட்டிப் பாராட்டினர்.

**மாநாட்டுப் பணிக்காக உழைத்த தோழர்கள்:** மணிமேகலை (ரங்கம்பாளையம்), முத்துலட்சுமி (திருப்பூர்), சுமதி (இராசிபுரம்), சபீனா (பள்ளிப் பாளையம்), மீனாட்சி (பள்ளிப்பாளையம்), கவிப்பிரியா (சென்னிமலை), ஜோதி மணி (சென்னி மலை), சங்கீதா (சென்னை), ராஜி (சென்னை), தேன்மொழி (திருப்பூர்), சரசுவதி (திருப்பூர்), மணிமொழி (கோபி), இனியா (மேட்டூர்), இரண்யா (சென்னை).

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 21st December 2017

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN